### காணொலிக் காட்சி வாயிலாக – இன்று

# மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், அதனை அடுத்து நடைபெற்ற மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்திலும் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில், உடனடியாக ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள BLO, BLA2 மற்றும் BLC விவரங்களை சரிபார்க்கும் பணி மாவட்டக் கழகச் செயலாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விவரங்கள் கள அளவில் சரிபார்க்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு வரும் 10/09/25 அன்று ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒட்டி மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆற்ற வேண்டியுள்ள பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று (07/09/2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.30 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு**
மண்டலப் பொறுப்பாளர்

### நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ்

# சேலத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,செப்.7-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் மரம் நடும் நிகழ்வினை சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் நேற்று (06.09.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் வனப்பகுதியை 33 விழுக்காடு அளவிற்கு அதிகரிக்க உத்தரவிட்டு, வனப்பரப்பை அதிகரிக்க தமிழ்நாடு பசுமை இயக்கம் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, தமிழகத்தில் வனப்பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளின் மூலம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய தினம் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் பலவகை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வேப்பம், பூவின், புங்கை, நாவல், மூங்கில், தேக்கு உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட மரங்கள் சேலம் மாநகராட்சியின் பொது இடம் வகைப்பாட்டில் உள்ள 18,250 சதுர அடி நிலப் பரப்பில் நடப்பட்டுள்ளது. அதேபோன்று, பொதுமக்களும் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்களில் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரித்து, தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக மாற்றிட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மாநகர பொறியாளர் செல்வநாயகம், உதவி ஆணையர் திருமதி லட்சுமி, செயற்பொறியாளர்கள் பழனிசாமி, திருமதி திலகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சமத்துவம் போற்றுவோம்! பெரியாரியம் பழகுவோம்!

# பெரியாரின் பேரொளி உலகுக்கு வழிகாட்டட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

இலண்டன், செப்.7-

சமத்துவம் போற்றுவோம், பெரியாரியம் பழகுவோம் எனவும், பெரியாரின் பேரொளி உலகுக்கு வழி காட்டப்படும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**பழமைவாதங்களும் பிற்போக்குத்தனங்களும் நிறைந்திருக்கும் சமூகத்தில், அறிவார்ந்த உரையாடல்களை நிகழ்த்தி, மக்களுக்கு விழிப்புணர்வூட்டி, தலைநிமிரச் செய்து, அவர்களது நம்பிக்கையை வாக்குகளாகப் பெற்று, ஒட்டுமொத்த இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் தமிழ்நாடு உயர்ந்திருப்பதற்கான அடித்தளம், அறிவாசான் தந்தை பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம்!**

**ஆயிரம் ஆண்டுகளாக அறிவார்ந்த பலரின் கனவாக இருக்கும் ஆக்ஸ்போர்டு அறிவாலயத்தில், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் கனவாக எழுந்த சுயமரியாதை இயக்கத்தையும் புரட்சியாளர் பெரியாரையும் போற்றினேன்!**

**சமத்துவம் போற்றுவோம்!**

**பெரியாரியம் பழகுவோம்!**

**பெரியாரின் பேரொளி உலகுக்கு வழிகாட்டட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஆக்ஸ்போர்ட் அறிவாலயத்தில்

# பேராசிரியராகத் தமிழ்த் தொண்டாற்றியவர் ஜி.யு. போப்!

## ஜி.யு.போப் கல்லறையில் மரியாதை செலுத்தியது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, செப்.7-

ஆக்ஸ்போர்ட்டில் ஜி.யு.போப் அவர்களது கல்லறையில் மரியாதை செலுத்தியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஜி.யு.போப்!**

- 19 வயதில் தமிழ்நாட்டிற்கு வந்தார்!
- தமிழ் மேல் தீராக் காதல் கொண்டார்!
- தமிழ்ச்சுவையை உலகறியத் திருக்குறள், திருவாசகம், நாலடியார் உள்ளிட்ட நூல்களை மொழிபெயர்த்தார்!
- ஆக்ஸ்போர்ட் அறிவாலயத்தில் பேராசிரியராகத் தமிழ்த் தொண்டாற்றினார்!

ஆக்ஸ்போர்ட் சென்றுவிட்டு, அங்கு உறங்கும் தமிழ் மாணவரைப் போற்றாமல் வருவது அறமாகுமா?

அங்குள்ள ஜி.யு.போப் அவர்களது கல்லறையில் மரியாதை செலுத்திய தருணம்...



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “ஐயன்மேன் 5150 டிரையத்லான் சென்னை (IRONMAN 5150 TRIATHLON CHENNAI)” போட்டி அறிவிப்பு குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையில் நேற்று முன்தினம் (05.9.2025) நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஐயன்மேன் இந்தியாவின் தலைவர் தீபக் ராஜ், ஐயன்மேன் இந்தியா போட்டியின் துணை நடுவர் ஆர்த்திசுவாமிநாதன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



திண்டுக்கல் பகுதி 4,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



பாலக்கோடு பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கொண்டலாம்பட்டி பகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.



புகளூர் நகரம்,
கரூர் மாவட்டம்.



சலவன்பேட்டை பகுதி,
வேலூர் மாவட்டம்.



அரக்கோணம் மேற்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.